கடவுள் துணை.

ஆப்ரிக்கா அமெரிக்கா
முதலான யிடங்களில் பெயர்பெற்ற

ஸீக்வாஜெயக்கொடி.

(o)

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியார்
அவர்களால்
இயற்றப்பட்டு,

தமது
சென்னை சூளை,
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

உ

கடவுள் துணை,

ஸீக்வாஜெயக்கொடி.

மின்முடுகு-வெண்பா.

எத்தனைதே வெத்தனைதே ரெத்தனையூ ரெத்தனையா
ரெத்தனைமா முத்தர்வர வித்தரையில்—நித்தமுமே
காணக்கண் ணுண்டறையக் கருத்துண் டவராலே
போனபிணி யுண்டோ புகல்.

நாதநாமக்கிரியை-சிந்து-பல்லவி.

விதிவிட்டுப்போச்சு—ஸீக்வாஜெயக்கொடி
யுதவிவந்தாச்சு (விதி)

அநுபல்லவி.

விதியிட்டு மதிகெட்டு நிதிகொட்டித்ததியுற்று
பதியற்றிடுஞ்சென்னைப் பட்டணத்தாருக்கு (விதி)

சரணங்கள்.

அரனென்றும் அயனென்றும் அரியென்றும் நரியென்றும்
அருளென்றும் பொருளென்றும் அம்மைக்காளிகளென்றும்
குரமென்றும் குறியென்றும் குகனென்றும் மகனென்றும்
குண்ணென்றும் மலையென்றும் கோயில்குளங்களென்றும்

காசியென்றோடி—பின்னும்ராமேச்சுரம்
ஆசைகொண்டாடி—சொந்த

பெண்டுப்பிள்ளைகள்ளுடி பணமும்யினமுங்கூடி
பெருத்தமலைகள்காடு பொய்கைநதிகளாடி
கண்டவிடத்துக்கோடி கைப்பணம்விரையாடி
காத்தாய்பரக்குமிந்தக் காசினியோருக்கு (விதி)

இருளல்லமருளல்ல — யேமஜாமமுமல்ல
வெட்சணிருபியல்ல — தட்சணைப்பரியல்ல
கருவல்லகுருவல்ல — கல்லுப்புல்லுகளல்ல
காளிகூளியுமல்ல — காட்டேறிமுனியல்ல

வசியமுமல்ல—முனைச்சூரானைப்போல
பெசிவருமல்ல—வெருஞ்

சக்கல்லபிளகல்ல — சூதுவாதுமல்ல
ஒத்தச்சமாதியு — மற்றவிடமுமல்ல
பத்தெட்டுபரியல்ல — பத்தியமுறையல்ல
பாமோஆமோசென்னை — பட்டணத்தாருக்கு (விதி)

சாயுச்யபதவியைச் — சார்ந்தமஸ்தான்தன்னை
சண்டாளர்சிலர்கூடித் — திண்டாடவிட்டார்கள்
நேயமாய்ப்பேரின்ப — நெறிநின்றடிம்பியை
நெடுகக்கயறுகட்டி — அகடாயிழுத்துப்போட்டார்

கிணற்றினில்விழுந்து—பிறந்தபொன்னியையொரு
கணத்தினிலெடுத்து—யிந்த

உலகத்துப்பிணியெல்லாந் — தீர்க்ககார்க்கத்தெய்வம்
உண்டாச்சப்பாதாளங் — கண்டாச்சுப்பாரென்று
கலகப்படுத்தியெட்டுத் — திசையுங்கயறுகட்டி
கைதட்டினாந்த — பொய்கட்டல்லவோயிப்போ (விதி)

மொண்டிமுடங்களின்னம் — மொழியும்விழியும்சில
முடக்கும்பிடக்கும்பல — மடக்கும்வியாதிகளெல்லாம்
கண்டிக்கக்கலியுகங் — கார்க்கப்பராபரம்
ககனமார்க்கமாக — புவனத்தில்வருவதாய்

பைபிலின்படியோ—யிந்துமார்க்கம்போல
மிடியெல்லாம்பிடியோ—முன்னே

துலைந்தயுகங்கள்மூன்றும் — துணைசெய்நாராயணன்
துஷ்டனாசிஷ்டைசெய் — அஷ்டலட்சுமிவாசன்
கலியுகமதையாள — கலிக்காவதாரமாய்
கண்ணன்வருவாரெண — துண்மையாயுலகெங்கும் (விதி)

கண்காட்டிகால்காட்டி — கைகாட்டிமெய்காட்டி
காயம்வாளம்பூரம் — விரம்ரசத்தைத்தின்று
புண்ணாகிப்புழுவாகி — பொய்பாகிமெய்வாடி
புத்திமயங்கிட்டு — மத்தியில்முடமாகி

போகவேண்டாமே—வலிக்வா துரையைநாளும்
நோகவேண்டாமே—ஐயா

யேழைக்கிவிலேயில்லே யிம்சைப்பத்தியமில்லே
இரண்டுமூன்றுநாலு எண்ணற்றதுகையில்லே
மோழைமுடங்களின்னம் மொண்டிஜண்டிகளெல்லாம்
மூடினத்திறைகொஞ்சம் ஜாடித்திறக்குமுன்னே (விதி)

வாதபேதமான வாய்வுசேர்முடக்குகள்
வரட்டுத்திருட்டுப்பெண்கள் கொடுக்கும்கொருக்குவெள்ளே
சீதயெறிப்புமற்ற சில்லரைப்பல்லுநோய்
சிக்வாயின்பேர்சொன்னல் போக்குகள் காட்டுதாம்

புறப்பட்டுவாரும்—பரிணாந்துமிஷத்தில்
பாதையைத்தீரும்—ஐயா

அங்கேசென்றுதீர்க்க அவமானப்படவேண்டாம்
அப்படியாகாட்டால் கைப்பிடியொருரூபாய்
தங்கிவாங்குவமென்று தாமதப்படவேண்டாம்
தள்ளுக்கிள்ளிமெள்ள கொள்ளுவாயொருபுட்டி (விதி)

அஞ்சரைமணிநேரம் மிஞ்சினல்வாராது
அப்பாலிப்பாலென்று தப்பினல்வாராது
கொஞ்சத்துக்கஞ்சினல் வஞ்சநோய்தீராது
குத்துவெட்டுதிட்டு பட்டுகெட்டாயினும்

கோட்டைமைதானம்—சென்றொருபுட்டியை
கொள்வதுபாயம்—இன்னம்

இரண்டொருமாதமே யிருக்குமவர்சகாயம்
இதுவேவோதப்பினல் நோயால்வருமபாயம்
திருட்டுவயித்தியர்பேச்சு தேடுவதவனுயம்
தீரமாய்சிக்வாவென் றொருதிரமுனைத்தாலும் (விதி)

நொண்டிச் சிந்து.

சென்னையெனும்பதியோரே—ஐயா
சிக்குக்காரேவலிவு போக்குக்காரே
கன்னிகள்நோய்க்காரே—கால்கை
முடக்குக்காரே மெத்தயிடக்குக்காரே
பித்தயெறிச்சற்காரே—யிடுப்பு
பிடிப்புக்காரே பல்லுகடுப்புக்காரே

சத்திபிரும்பல்காரே—வாய்வினால்
சாய்ந்தவரோடடம்பு காய்ந்தவரே
பாரிசவாய்வுக்காரே—ஐயா
பட்டவரோமெத்த கெட்டவரே
நாரியர்நோயாலே—திரேகம்
நலிந்தவரேமெத்த சலிந்தவரே
விரல்கள்குறைந்தபேரே—மேகத்தால்
வெந்தவரேவுடம்பு நொந்தவரே
வயித்தியர்விட்டபேரே—ஐயா
வாழ்ந்தவரேபணந் தாழ்ந்தவரே
பயித்தியம்பிடித்தவரே—பணத்தை
யழித்தவரே நோய்கொழுத்தவரே
பாயில்படுக்கவேண்டாம்—காசிபணம்
அழிக்கவேண்டாம் உயிரை ஒழிக்கவேண்டாம்
வயித்தியஞ்செய்யவேண்டாம்—அவரை
வணங்கவேண்டாமெதிரில் சுணங்கவேண்டாம்
வீரம்பூரந்தின்னவேண்டாம்—உடம்பு
வேகவேண்டாம் வீணாய்—சாகவேண்டாம்
பத்தியங் காக்கவேண்டாம்—ஐயா
பயம்வேண்டாம் அபஜெயம்வேண்டாம்
சென்னையின்னம் பலவூரார்—முடங்களை
தீர்த்ததைக்கேள் கண்ணால் பார்த்ததைக்கேள்
நடக்காதமுடவர்களை—சிக்வா
நடக்கச்சொன்னார் ஓட்டம் பிடிக்கச்சொன்னார்
தடியூனுமுடவர்களை—க்ஷணத்திலே
தாண்டச்சொல்வார் கோல்வேண்டாமென்பார்
பதினைந்துவருஷமதாய்—சாயபு
பட்டுக்கிடந்தான் பாரிசத்தால்கெட்டுகிடந்தான்
யிவனுக்கும்பெரும்பாதை—மேதரவன்
யேங்கிகிடந்தான்கோலை தாங்கிகிடந்தான்
ராமசாமிசெட்டியொருவன்—வியாதியஸ்தன்
ரங்கையனுக்கொருவன்—கெங்கையனும்
சோமசுந்திரபிள்ளை கெங்குரெட்டி
வீரமுதலி முத்துசாமிமுதலிகள்
ஞானென்னும்பத்தனொருவன்—சுப்புபத்தன்
கன்னியொருவன்பர பொன்னனொருவன்

யிப்படிபேர்களுரைத்தால்—யேடு
யெட்டாதென்றேகதை விட்டேனின்றே
யித்தரையில் வியாதித்தீர்ந்தோர்—கணக்கு
யெண்ணப்படுமோ தொகை-சொல்லப்படுமோ
ததிபிதுவென்றேயெண்ணி-சிக்குவாவை
தாவிவாருங்கள் பிணிபோவக்கோருங்கள் (தந்தின)

கும்மிப்பாட்டுகள்.

சீர்பெரும்சிமை தனிற்பிறந்து—புவி
செங்ககோலரசி யுரவடைந்து
கார்கவிழ்பூமி வலமாகவேவந்த
கருத்தைக்கேளும் நோயாளிகளே. 1

சீமைமெச்சுகின்ற தங்கமையாயிவர்
சிக்குத்தீர்க்கவந்த சிங்கமையா
தாமதம்செய்து யிருக்கவேண்டாமுடன்
தன்னைப்பாருங்கள் நோயாளிகளே. 2

காத்துள்ளபோதிலே தூத்திக்கொள்ளுமென்று
கற்றவர்சொன்ன மொழியகன்று
பார்த்துக்கொள்வோமென் றிருக்கவேண்டாம்
பாதையைத்தீரும் நோயாளிகளே. 3

புலத்தியர்பார்த்துக் கெடுவுவைத்து அவர்
போகாதென்றுவிட்ட நோய்களெல்லாம்
க்ஷணத்தினில்சிக்குவா தெரிசனங்கண்டதும்
செல்லுதாம்வியாதி நோயாளிகளே. 4

சென்னைவயித்தியர் தூங்கிவிட்டார்—சில
தேசவயித்தியர் வாங்கிவிட்டார
பன்னிடும்சிக்வா துரையாலே—நம்ம
பாதையொழியிது நேசர்களே. 5

ஆயிரமானத்துகையாலே—வண்டி
வாராகச்செய்த நெரியாலே
வாயுவென்கிற நோய்களெல்லாமிப்போ
வானம்பறக்குதே நேசர்களே. 6

இந்திரனேறும் விமானம்போலேயவர்
தந்திரமாய்ச்செய்த வண்டியிலே

மந்திரத்தாலுந் தீராதவினையெல்லாம்
யெந்திரம்போலே பறக்குதையா. 7

சென்னையில்மட்டுமே தீர்ப்பதல்ல—சில
தேசங்கள்மட்டுமே பார்ப்பதல்ல
பன்னவெகுநாலை தீவாந்திரமெல்லாம்
பார்த்துவருகிறார் நேசர்களே. 8

சென்னையில்விற்பனை பதின்மூவாயிரம்
சேர்ந்தபணத்துகை தனையெடுத்து
அன்னைபோல்காக்கும் மெட்ருஸ்பாங்கியில்
அன்பாய்துரையவர் கட்டிவிட்டு. 9

காஞ்சிபுரமென்னும் நகர்தனில்தான்வந்து
காக்காய்போல்துரை சுத்தினதால்
வேண்டும்வேண்டாமலே மூவாயிரரூபாய்
விற்பனையாச்சுது நேசர்களே. 10

கொஞ்சம்விற்பனை யானதினால்துரை
கோபமனதுடன் ஊரைவிட்டு
சந்தடிசெய்யாமல் வேலூர்நகர்வந்த
சட்டத்தைச்சொல்லுறேன் நேசர்களே. 11

ஒண்ணரைவாரம் கோட்டைமைதானத்தில்
உத்தமன்விற்பனை செய்ததைக்கேள்
கொஞ்சநஞ்மல்ல எண்ணாயிரம்ரூபாய்
குவிந்ததுபாருங்கள் நேசர்களே. 12

இத்தனைவைதியர் உலகத்திருந்தென்ன
யென்னசுகத்தை யடைந்தார்கள் அவர்கள்
கஷ்டப்பட்டஒரு மூலிகைத்தன்னாலே
கணக்குவழக்குண்டோ தகையுரைக்க. 13

எப்பொருள்யார்வாயிற் கேட்டிடினுமதை
மெய்ப்பொருள்காண்ப தறிதெனவே
முப்பவர்சொல்லிய மூதறிவாமதை
முந்திபுணருங்கள் நேசர்களே. 14

சீக்வாசிந்து-முற்றிற்று.

——(*)——